## நடப்பு நிகழ்வுகள்: மார்ச் 8, 2017

### 1. 2017 சர்வதேச மகளிர் தினத்தின்(IWD) மையக்கரு என்ன ?

A. Women's History Month

B. Equality for Women is Progress for All

C. Planet 50-50 by 2030: Step It Up for Gender Equality

D. Women in the Changing World of Work: Planet 50-50 by 2030

**விடை: D. Women in the Changing World of Work: Planet 50-50 by 2030**

பெண்களின் உரிமைகளுக்கான போராட்டத்தை நினைவு கூரும் வகையில், அதேசமயம் அதிக சமத்துவம் என்று கூறும்போது பெண்களின் சாதனைகளை முன்னிலைப்படுத்த ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8-ம் தேதி சர்வதேச மகளிர் தினம்(IWD) அனுசரிக்கப்படுகிறது. 2017 ஆம் ஆண்டிற்கான மையக்கரு "Women in the Changing World of Work: Planet 50-50 by 2030" மற்றும் இதன் பிரச்சார மையக்கரு "#BeBoldForChange".

### 2. 2016 மூர்த்திதேவி விருது யாருக்கு வழங்கப்பட்டுள்ளது ?

A. கலகலுரி ஏனோக்

B. வீரேந்திர ஹெக்டே

C. எம் பி வீரேந்திர குமார்

D. நிமிதா கவுர்

**விடை: C. எம் பி வீரேந்திர குமார்**

குறிப்பிடத்தக்க மலையாள ஆசிரியர் மற்றும் பத்திரிகையாளரான எம் பி வீரேந்திர குமார், அவரது பயணக்கட்டுரை நூலான "Hymavathabhoovil"-க்கு சமீபத்தில் பாரதிய ஞானபீட அமைப்பு மூலம் 30வது பதிப்பான 2016 மூர்த்திதேவி விருது பெற்றார். இப்புத்தகம், இந்திய கலாச்சாரத்தின் பண்டைய சுவடுகள், புராணம், இலக்கியம் மற்றும் இந்திய சமவெளிகள், பள்ளத்தாக்குகள் மற்றும் மலைகளில் பரவியிருக்கும் மக்கள் பற்றி பேசுகிறது. மேலும் இது, "பலவீனமான மலை சுற்றுச்சூழல்" மீதான சுற்றுச்சூழல் கவலைகளை உயர்த்திக்காட்டுகிறது மற்றும் போதிய நீர்

வளங்கள் மற்றும் கழிவு அகற்றல் அமைப்புகள் இல்லாமை குறித்து நடவடிக்கை எடுக்கவும் அழைக்கிறது. விருதானது, ஒரு சரஸ்வதி சிலை, ஒரு சான்று தகடு மற்றும் ரூ. 4 லட்சம் பரிசுத்தொகையை கொண்டுள்ளது.ஆங்கிலம் தவிர்த்து, ஏதேனும் ஒரு இந்திய மொழியில் இந்தியத் தத்துவம் தொடர்பாக எழுதப்படும் புத்தகங்களுக்கு ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்படுகிறது. குமார், மலையாள தினசரி மாத்ருபூமியின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் (CMD) மற்றும் ராஜ்யசபா எம்.பி. ஆக உள்ளார்.

**3. இந்தியாவின் எந்த வங்கி, முதன் முதலில் வாடிக்கையாளர் சேவைக்காக செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான "Electronic Virtual Assistant (EVA)" Chatbot-யை அறிமுகம் செய்துள்ளது ?**

A. ஐசிஐசிஐ வங்கி
B. ஹெச்டிஎப்சி வங்கி
C. ஆக்சிஸ் வங்கி
D. எஸ்பிஐ வங்கி

**விடை: B. ஹெச்டிஎப்சி வங்கி**

ஹெச்டிஎப்சி வங்கி, சமீபத்தில் வாடிக்கையாளர் சேவைக்காக இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான "Electronic Virtual Assistant (EVA)" Chatbot-யை அறிமுகம் செய்துள்ளது. EVA, மில்லியன் கணக்கான வாடிக்கையாளர்களுக்கு பல தளங்களில் உடனடியாக பதில் அளிக்கும். EVA-வானது, ஆயிரக்கணக்கான இடங்களில் இருந்து பதில்களை உள்வாங்கி, 0.4 வினாடிகளுக்கும் குறைவான நேரத்தில் எளிமையான மொழியில் பதில்களை வழங்கும்.

**4. மாண்ட்ரீல் (கனடா) அடிப்படையிலான விமான நிலையங்கள் கவுன்சிலின் 2016 சர்வதேச தரவரிசையில், எந்த இந்திய விமான நிலையம், ஆண்டிற்கு 40 மில்லியன் பயணிகள் பிரிவில் உலகளவில் 2வது இடத்தில் உள்ளது ?**

A. இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம்
B. சத்ரபதி சிவாஜி சர்வதேச விமான நிலையம்

C. ஜிஎம்ஆர் ஹைதெராபாத் சர்வதேச விமான நிலையம்
D. ராஜீவ் காந்தி சர்வதேச விமானநிலையம்

**விடை: A. இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம்**

இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம் (IGIA), மாண்ட்ரீல் (கனடா) அடிப்படையிலான விமான நிலையங்கள் கவுன்சிலின் 2016 சர்வதேச தரவரிசையில், ஆண்டிற்கு 40 மில்லியன் பயணிகள் பிரிவில் உலகளவில் 2வது இடத்தில் உள்ளது. இந்த தரவரிசை, விமான சேவை தரம் (ASQ) கணக்கெடுப்பு அறிக்கை- 2016 யை அடிப்படையாகக் கொண்டது. இது தவிர, ஜிஎம்ஆர் ஹைதெராபாத் சர்வதேச விமானநிலையமானது, விமான சேவை தர (ASQ) பயணிகள் கணக்கெடுப்பில் 2016 ஆம் ஆண்டில் ஆண்டொன்றுக்கு 5-15 மில்லியன் பயணிகள் பிரிவில் முதல் இடத்தை பிடித்துள்ளது. ஹைதெராபாத் விமான நிலையம், 2009-ல் 4.4 ஆக இருந்த அதன் மதிப்பெண்ணை 2016 இல் 4.9 ஆக சீராக உயர்த்தியுள்ளதை இந்த புள்ளிவிவர கணக்கெடுப்புகள் காட்டுகின்றன. மதிப்பெண்கள் 1 முதல் 5 என்ற அளவுகோலில் வழங்கப்படுகிறது. ஓராண்டில் வாடிக்கையாளர்கள் தங்கள் விமான நிலையங்களுக்கு வழங்கியுள்ள ரேடிங்ஸ் அடிப்படையில் ASQ விருதுகள் வழங்கப்படுகின்றன. மொரிஷியஸ்-ல் உள்ள போர்ட் லூயிசில் அக்டோபர் 2017 இல் விருதுகள் வழங்கப்படும்.

**5. எந்த அமைச்சகம், International Smart Grid Action Network (ISGAN)-ன் 13வது நிர்வாகக் குழு கூட்டத்தை நடத்துகிறது ?**

A. எலெக்ட்ரானிக்ஸ் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்
B. மின்சார அமைச்சகம்
C. தகவல் மற்றும் ஒளிபரப்புத்துறை அமைச்சகம்
D. திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் முனைவு அமைச்சகம்

**விடை: B. மின்சார அமைச்சகம்**

மின்சார அமைச்சகம், International Smart Grid Action Network (ISGAN)-ன் 13வது நிர்வாகக் குழு கூட்டத்தை ஹரியானாவின் குருகிராமில் உள்ள பவர்கிரிட் நிறுவன மையத்தில் மார்ச் 6, 2017-ல் நடத்துகிறது. இது, இந்தியாவில் நடைபெறும் முதல் ISGAN ExCo கூட்டமாகும். இந்த 3 நாள் நிகழ்ச்சியில்,

ஜெர்மனி, கொரியா, நார்வே, ரஷ்யா, தென் ஆப்பிரிக்கா, அமெரிக்கா மற்றும் ஐக்கிய அரபு ராஜ்ஜியம் முதலிய 18 நாடுகளில் இருந்து மொத்தம் 36 பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர். மாநாட்டின் நோக்கம் ஸ்மார்ட் கிரிட் தொழில்நுட்பங்களின் புரிதலை மேம்படுத்துதல் மற்றும் அரசு கொள்கைகளை அனுமதிக்கும் தொடர்புடைய தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்ள ஊக்குவிப்பதாகும்.

**6. சமீபத்தில் மறைந்த கலிகா பிரசாத் பட்டாச்சார்யா (Kalika Prasad Bhattacharya), எந்த மொழியின் குறிப்பிடத்தக்க நாட்டுப்புற பாடகர் ஆவார் ?**

A. ஒடியா
B. இந்தி
C. பெங்காலி
D. உருது

**விடை: C. பெங்காலி**

குறிப்பிடத்தக்க பெங்காலி நாட்டுப்புற இசை பாடகர் கலிகா பிரசாத் பட்டாச்சார்யா(46), சமீபத்தில் மேற்கு வங்கத்தின் ஹூக்ளி மாவட்டத்தில் காலமானார். அவரது 'Dohar' இசைக்குழு ஆல்பங்கள் மூலம் தற்போதைய தலைமுறை மத்தியில் பெங்கால் கிராமிய பாடல்களை பிரபலப்படுத்துவது மட்டுமின்றி, Jaatishwar (2014), Moner Manush (2010) மற்றும் Bhuban Majhi (2017) ஆகிய படங்களுக்கும் இவர் தனது குரலை அளித்துள்ளார்.

**7. எந்த மத்திய அமைச்சர், சர்வதேச யோகா திருவிழாவை (IYF) புது தில்லியில் தொடங்கி வைத்தார் ?**

A. நரேந்திர மோடி
B. ராஜ் நாத் சிங்
C. அருண் ஜெட்லி
D. வெங்கையா நாயுடு

**விடை: D. வெங்கையா நாயுடு**

2017 சர்வதேச யோகா தினத்தின் ஒரு திரைச்சீலை உயர்த்தியாக, புது தில்லியின் தல்கதோரா உள்ளரங்க ஸ்டேடியத்தில் மார்ச் 8- ஆம் தேதி 2017 சர்வதேச யோகா திருவிழா தொடங்கியது. 3 நாள் நிகழ்வை ஆயுஷ் அமைச்சகம் மற்றும் மொரார்ஜி தேசாய் தேசிய யோகா நிறுவனம் ஆகிய இரண்டும் இந்திய யோகா சங்கம் (IYA) மற்றும் புது தில்லி முனிசிபல் கார்ப்பரேஷன் (NDMC) உடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ளது. இதனை மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்புத்துறை மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீட்டுவசதி அமைச்சர் வெங்கையா நாயுடு தொடங்கி வைத்தார். விழாவின் முக்கிய நோக்கம், ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் சர்வதேச யோகா தினத்தின் கொண்டாட்டம் தொடர்பாக மக்களை கூர் உணர்ச்சி உண்டாக்குவதே ஆகும். 15 முதல் 18 நாடுகளில் இருந்து சிறந்த யோகா குருக்கள், யோகா மாஸ்டர்கள், அறிஞர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் இந்த மெகா நிகழ்ச்சியில் பங்கேற்பர். யோகா பட்டறை, விரிவுரைகள், சத்சங்கம், கலாச்சார நிகழ்ச்சிகள் மற்றும் யோகா செய்முறைகளும் இதில் உண்டு.

**8. "The Secret Diary of Kasturba" என்ற புத்தகத்தின் ஆசிரியர் யார் ?**

A. நீலிமா டால்மியா ஆதார்
B. அருணா சக்ரவர்த்தி
C. சோம் சர்மா
D. நரேந்திர வர்மா

**விடை: A. நீலிமா டால்மியா ஆதார்**

"The Secret Diary of Kasturba" என்ற புத்தகத்தை நீலிமா டால்மியா ஆதார் என்பவர் எழுதியுள்ளார். இது, தேசத்தந்தை மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியின் மனைவி கஸ்தூரிபாய் வாழ்க்கை குறித்து காலவாரியாக கற்பனையாக எழுதப்பட்ட புத்தகம். அக்கம்பக்கத்தில் அக்டோபர் 2, 1869-ல் மோகன்தாஸ் காந்தி பிறப்பதற்கு 6 மாதத்திற்கு முன்னர், 1869 ஏப்ரல் 11 ம் தேதி பிறந்த அவரின் போர்பந்தர் அனுபவங்கள், இளம் மோகன்தாஸ் உடனான ஆரம்ப வாழ்க்கை, அவளது ஆப்பிரிக்கா நாட்கள்,மோகன்தாஸ் ஒரு மக்கள் தலைவராக உருவாகுதல் ஆகியவை குறித்து நாட்குறிப்பில் வடிவில் கஸ்தூரிபாய் எழுதுவது போன்று இப்புத்தகம் எழுதப்பட்டு இருக்கிறது.

புத்தகம், மகாத்மா காந்தியின் மனைவியாக கஸ்தூரிபா இருந்தது எதை குறிப்பிடுகிறது எனபதை உலகுக்கு சொல்ல முயற்சிக்கிறது.

**9. நர்மதா நதியின் குறுக்கே உள்ள இந்தியாவின் நீண்ட கம்பிகளால் இணைக்கப்பட்ட பாதைப் பாலம், எந்த தேசிய நெடுஞ்சாலையில்(NH) அமைந்துள்ளது ?**

A. NH-1

B. NH-5

C. NH-2

D. NH-8

**விடை: D. NH-8**

பிரதமர் நரேந்திர மோடி சமீபத்தில், தேசிய நெடுஞ்சாலை 8-ன் (புதிய NH 48) அகமதாபாத்-மும்பை பிரிவில் நர்மதா நதியின் மீது இந்தியாவின் நீண்ட கம்பிகளால் இணைக்கப்பட்ட பாதைப் பாலத்தை குஜராத்தின் பருச்சில் தொடங்கி வைத்தார். கூடுதலாக அளவிடப்பட்ட நான்கு வழிப்பாதை பாலமானது, 14.5 மீ வண்டிப்பாதை மற்றும் 3 மீ நடைபாதையுடன் 20.8 மீ பரந்து உள்ளது. 1.5 மீட்டர் விட்டம் கொண்ட குவியல் அடித்தளத்தின் மீது 36 மீட்டர் உயரம் கொண்ட 9 கோபுர வடிவங்கள் இதற்கு துணைபுரிகிறது. 400 க்கும் மேற்பட்ட LED விளக்குகள் மூலம் பாலம் ஒளிரும். இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் ரூ. 379 கோடி திட்டத்தின் ஒரு பகுதியாக, லார்சன் அண்ட் டர்போ மூலம் இது கட்டப்பட்டது.

**10. எந்த மாநில அரசு, அதன் முதல்-வகையான "துலிப் திருவிழாவை" ஏற்பாடு செய்யவுள்ளது ?**

A. இமாசலப் பிரதேசம்

B. ஜம்மு மற்றும் காஷ்மீர்

C. சிக்கிம்

D. அருணாசலப் பிரதேசம்

**விடை: B. ஜம்மு மற்றும் காஷ்மீர்**

ஜம்மு காஷ்மீர் அரசு, கோடைகால தலைநகரான ஸ்ரீநகரில் ஏப்ரல் 1, 2017 முதல் அதன் முதல்-வகையான "துலிப் திருவிழாவை" ஏற்பாடு செய்யும். ஆசியாவின் மிகப்பெரிய துலிப் தோட்டமான "இந்திரா காந்தி நினைவு துலிப் கார்டனை" வெளிப்படுத்தும் இந்த 15 நாள் மெகா துலிப் விழாவானது, Bahaar-e-Kashmir (Spring in Kashmir) நிகழ்வின் ஒரு பகுதியாக இருக்கும். தோட்டத்தில் 46 வகைகளில் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட டூலிப்ஸ் உள்ளது மற்றும் இதன் திறப்பு பள்ளத்தாக்கில் சுற்றுலா பருவத்தின் தொடக்கத்தை குறிக்கிறது. திருவிழா தளத்தில் உள்ள அலங்கரிக்கப்பட்ட கியோஸ்கள் மற்றும் கூடங்கள், பாரம்பரிய மற்றும் கலாச்சார உணர்வுடன் பள்ளத்தாக்கின் கைவினைப் பொருள்கள் மற்றும் சமையற்கலையை வெளிப்படுத்தும். இந்த மெகா திருவிழா தவிர, 'Aalmi Mushaira' எனும் நிகழ்வும் நடைபெறவுள்ளது, இதில் உலக புகழ்பெற்ற கவிஞர்கள் அவர்களின் சமீபத்திய உருது பாடல்களை பாடி பார்வையாளர்களை கவர்வர். இதுவும் இந்த பள்ளத்தாக்கில் நடைபெறவுள்ள முதல்-வகையான நிகழ்வாகும்.